

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 130 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 04 – வியாழக்கிழமை 19 டிசம்பர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 130 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 04 - Thursday 19 December 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## அரசியல் சட்டத்தின் பாதுகாப்பு பற்றியும் – நாட்டைப் பற்றியும் கவலைப்படுவோர்

# புரட்சியாளர் அம்பேத்கர் பெயரைத்தான் சொல்வார்கள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு பதிலடி !

**சென்னை, டிச.19-**

**நாடாளுமன்றத்தில் அரசியல் நிர்ணய சபையால் அரசமைப்புச் சட்டம் ஏற்கப் பட்டதன் 75 ஆண்டுகள் நிகழ்வை யொட்டி நடைபெற்ற விவாதத்தின் நிறைவில் உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கர் பற்றி மாறுபட்ட கருத்தை தெரிவித்து பேசினார்.**

**இதற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்து சமூக வலைதளப் பதிவில் பதிவிட்ட கருத்தில் "அரசியல் சட்டத்தின் பாது காப்பு பற்றியும் - நாட்டைப் பற்றியும் கவலைப்படுவோர் புரட்சியாளர் அம் பேத்கர் பெயரைத்தான் சொல்வார் கள்" என்று ஒன்றிய உள்துறை அமைச் சர் அமித்ஷாவுக்கு பதிலடி கொடுத் துள்ளார்.**

அரசியல் நிர்ணய சபையால் அரச மைப்புச் சட்டம் ஏற்கப்பட்டதன் 75 ஆண்டுகள் நிறைவை ஒட்டி, மாநி லங்களவையில் நடைபெற்ற 2 நாள் விவாதத்தின் நிறைவாக செவ்வாய்க் கிழமை சுமார் ஒன்றரை மணிநேரம் அமித் ஷா உரையாற்றினார்.

இந்த உரையின்போது பொது சிவில் சட்டம், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் குறித்து எதிர்க் கட்சிகளின்கருத்துகளைவிமர்சித்துப் பேசினார்.

அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது குறித்து பேசிய அமித்ஷா, கடந்த 16 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் 22 முறை அரசி யல் சட்டத்தில் திருத்தம் செய்துள்ள நிலையில், காங்கிரஸின் 55 ஆண் டுகால ஆட்சியில் 77 முறை திருத்தங்



கள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

இதனிடையே, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் அம்பேத்கர் பெயரை யும் அரசியல் சாசனம் குறித்து தொடர்ச்சியாக பேசி வருவதையும் விமர்சித்த அமித் ஷா, "அம்பேத்கர்.. அம்பேத்கர்.. அம்பேத்கர்' என முழக் கமிடுவது இப்போது ஃபேஷன் ஆகி விட்டது. இதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித் திருந்தால், சொர்க்கத்தில் அவர் களுக்கு இடம் கிடைத்திருக்கும் என்றார்.

அமித் ஷாவின் இந்த விமர்சனம் அம்பேத்கரை அவமதித்ததற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித் துள்ளனர். மேலும், அம்பேத்கரை அவமதித்த அமித்ஷா, உள்துறை அமைச்சர் பதவியில் இருந்து உடன டியாக விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் போராட்டத்தை முன் னெடுத்துள்ள னர்.

### முதல்வர் கண்டனம்!

உள்துறை அமைச்சர் அமித்ஷா வின் பேச்சுக்கு கண்டனம் தெரிவிக் கும் வகையில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"அதிக பாவங்கள் செய்பவர்கள் தான் புண்ணியத்தைப் பற்றிக் கவ லைப்பட வேண்டும். நாட்டைப் பற்றி யும் மக்களைப் பற்றியும் அரசியல் சட்டத்தின் பாதுகாப்பு பற்றியும் கவ லைப்படுவோர் புரட்சியாளர் அம்பேத் கர் பெயரைத்தான் சொல்வார்கள்!"**

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ராகுல் காந்தி கண்டனம்!

அமித் ஷாவின் பேச்சுக்கு கண்ட னம் தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதி விட்டுள்ள ராகுல் காந்தி, "மனுதர்மத் தின்மீதுநம்பிக்கைஉள்ளவர்களுக்கு அம்பேத்கர் பிரச்சினையாகத் தான் தெரிவார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### அமித்ஷா பேச்சுக்கு நாடாளுமன்றத்தில் கண்டன முழக்கம்!

அம்பேத்கரை அவமதிக்கும் வகை யில் நேற்று முன்தினம் நாடாளுமன் றத்தில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேசினார். இதற்கு இந்தியா கூட்டணி கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித் துள்ளனர். இந்நிலையில், நாடாளு மன்ற மக்களவை நேற்று கூடியதும், அம்பேத்கரை அவமதிக்கும் வகை யில் பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் வலியுறுத்தினர். மேலும், இதுகுறித்து நாடாளுமன்றத் தில் விவாதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. இதனை கண்டித்து இந்தியா கூட் டணி கட்சி எம்.பி.,க்கள் முழக்கம் எழுப்பினர். இதனால், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி மாநிலங்களவையிலும் இந்தியா கூட் டணி கட்சி எம்.பி.,க்கள் முழக்கங் களை எழுப்பினர். அப்போது, அமித் ஷாவின் பேச்சு குறித்து ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு விளக்க மளித்தார். இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சியினர், தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து முழக்கம் எழுப்பினர். இத னால் மாநிலங்களவையும் ஒத்தி வைத்தி வைக்கப்பட்டது.

### அமித்ஷாவை கண்டித்து எதிர்க்கட்சிகள் போராட்டம்

முன்னதாக, அமித்ஷாவை கண் டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந் தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கி ரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி உள் ளிட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அம்பேத்கரின் புகைப்படத்தை கைகளில் ஏந்தியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், ஒன்றிய அமைச் சர் அமித்ஷாவை கண்டித்து முழக் கங்களை எழுப்பினர். தனது பேச் சுக்கு அமித்ஷா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

### அமித்ஷா பதவி விலக வேண்டும் – காங்கிரஸ்

அம்பேத்கரை அவமதித்து பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது. இதுகுறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய, காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜுன கார்கே, அம்பேத்கரை அவ மதிப்பதை ஒரு போதும் ஏற்க முடி யாது என்று உறுதிபட தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் அம் பேத்கரையும், அரசியல் சாசனத்தை யும் உள்துறை அமைச்சர் அமித்ஷா அவமதிப்பு செய்துள்ளார்

அவரது எண்ணத்தில் மனுஸ் மிரிதி வலுவாக பதிந்துள்ளது எனவே அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அர சியலமைப்பை மதித்திட மனம் வர வில்லை. இதனால்தான் அம்பேத் கரை அவமதிப்பு செய்கிறார். இதனை காங்கிரஸ் கட்சி வன்மையாக கண் டிக்கிறது. உள்துறை அமைச்சர் அமித்ஷா தமது பதவியை ராஜி னாமா செய்ய வேண்டும். இது இந் தியாகூட்டணிகட்சிகளின்கோரிக்கை. நாட்டு மக்கள் முன்பு அமித்ஷா மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

---

### "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு

## "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்திற்கு மேலும் ரூ.400 கோடி ஒதுக்கீடு !

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.19-**

**"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்திற்கு தமிழ்நாடு அரசால் மேலும் ரூ.400 கோடி நிதி ஒதுக் கீடு செய்யப்படும் என முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறி வித்துள்ளார்.**

"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/ வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதி களில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக "அனைவருக்கும் வீடு" என்ற கணக்கெடுப்பின் வழியாக கண் டறியப்பட்டதன் அடிப்படையில் "குடிசையில்லா தமிழ்நாடு" என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (2024-25) ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவ தற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின் றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்ப டும் வீட்டின் பரப்பளவு, சமைய லறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச் சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பி கள் குறைந்த விலையில் கொள் முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது.

வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal AccountSNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இது வரை தமிழ்நாடு அரசால் ரூ.1051.34 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.860.31 கோடி விடுவிக் கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.135.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத் தம் ரூ.995.61 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட் டத்தின் கீழ் செலவினம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற் பைப் பெற்றுள்ளது. இத்திட்டத் தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு இலட் சம் வீடுகளும் விரைவாக கட்டப் பட்டு வருகிறது. இதனை கருத் தில் கொண்டு, வீடுகளின் கட்டு மான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டுதமிழ்நாடு அரசு மேலும் ரூ.400 கோடிவிடுவித்து ஆணை வழங்கியுள்ளது. தற்போது வரப் பெற்றுள்ள ரூ.400 கோடியும் சேர்ந்து மொத்தம் ரூ.1451.34 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வரு கிறது.

இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக் கப்பட்டு, மக்களின் பயன்பாட் டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

---

### இன்று

## இனமானப் பேராசிரியர் பிறந்த நாள் !



இனமானப் பேராசிரியர்

அவர்களுக்கு

இன்று (19.12.2024) 102-ஆவது

பிறந்த நாளாகும்.